# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 04.11.2020 ((முற்பகல்)**

**முன்னிலை**

**திரு சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்கள்.SA8899/D/2019, SA8900/D/2019, SA11360/D/2019, SA11361/D/2019, SA11362/D/2019, SA11363/D/2019, SA11413/D/2019, SA11756/D/2019, SA12431/D/2019**

திரு S. துரைசாமி ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
பேரூர் மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்,
பேரூர் (இ) குனியமுத்தூர்,
கோயம்புத்தூர் - 641 008.

பொதுத் தகவல் அலுவலர்/ முதல்வர்,
ஸ்ரீ சௌடேஸ்வரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
அருள் கார்டன், ராமமூர்த்தி சாலை,
செல்வபுரம், கோயம்புத்தூர் - 600 026. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

**SA8899/D/2019**

| | |
|---|---|
| மனுதாரரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 05.07.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 09.08.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 09.09.2019 |

**SA8900/D/2019**

| | |
|---|---|
| மனுதாரரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 09.07.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 16.08.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 07.09.2019 |

**SA11360/D/2019**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 09.05.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 10.06.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 09.11.2019 |

**SA11361/D/2019**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 09.05.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 10.06.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 09.11.2019 |

**SA11362/D/2019**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 11.05.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 11.06.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 09.11.2019 |

**SA11363/D/2019**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 02.05.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 01.06.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 09.11.2019 |

**SA11413/D/2019**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 14.05.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 14.06.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 09.11.2019 |

**SA11756/D/2019**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 10.05.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 10.06.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 09.11.2019 |

**SA12431/D/2019**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 29.05.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 09.11.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 06.12.2019 |

******

<u>**ஆணை**</u>

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (04.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு S. துரைசாமி அவர்களை பலமுறை முயன்றும் தொடர்புகொள்ள இயலவில்லை. பொதுத் தகவல் அலுவலர், திரு பால்ராஜ், பேரூர் மாவட்ட கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், பேரூர் (இ) குனியமுத்தூர், கோயம்புத்தூர் மற்றும் திருமதி K.அனுராதா, முதல்வர், ஸ்ரீ சௌடேஸ்வரி வித்யாலயா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 05.07.2019, 09.07.2019, 09.05.2019, 11.05.2019, 14.05.2019, 02.05.2019, 10.05.2019 மற்றும் 29.05.2019 ஆகிய தேதிகளிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுக்களில் ஸ்ரீ சௌடேஸ்வரி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், 2018-2019 கல்வியாண்டில் மாணவர்கள் கல்வி சுற்றுலா சென்று வந்தது தொடர்பான தகவல்களை பேரூர் மாவட்ட கல்வி அலுவலர் அவர்களிடம் வழங்கக்கேட்டும், மேற்குறிப்பிட்ட பள்ளியில் மாணவர்களுக்காக செயல்பட்டு வரும் உணவகம் குறித்த தகவல்கள், மாணவர்களுக்காக இயங்கும் இரண்டு பேருந்துகள் மற்றும் ஒரு சிற்றுந்து தொடர்பான தகவல்கள், மாணவர்களுக்கு பள்ளி ஆசிரியைகள் மூலம் நடத்தப்பட்டு வரும் இந்தி வகுப்புகள் குறித்த தகவல்கள், மாணவர்களுக்கான உணவகம் தொடர்பான தகவல்கள், பள்ளியில் மாணவர் சேர்க்கைக்காக கல்வித்துறை ஏற்படுத்தியுள்ள விதிமுறைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள், மேற்படி பள்ளியில் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் நலனுக்காக ஸ்ரீ சௌடேஸ்வரி வித்யாலயா பெனுவலன்ட் பண்ட் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், அது தொடர்பான தகவல்களையும் பள்ளி முதல்வர், ஸ்ரீ சௌடேஸ்வரி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ராமமூர்த்தி சாலை, செல்வபுரம், கோயம்புத்தூர் என என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 05.08.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் மற்றும் பேரூர் மாவட்ட கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், குனியமுத்தூர், கோயம்புத்தூர் அவர்களும், 03.12.2019 தேதியிட்டு தாளாளர், ஸ்ரீ சௌடேஸ்வரி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, செல்வபுரம், கோயம்புத்தூர் அவர்களும் தகவல் வழங்கியுள்ளனர். பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவைக்களை மேல்முறையீட்டு அலுவலர்களுக்கு தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகும் பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 09.09.2019, 07.09.2019, 09.11.2019 மற்றும் 06.12.2019 ஆகிய தேதிகளிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (04.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளரை தொலைபேசி வாயிலாக பலமுறை முயன்றும் தொடர்பு கொள்ள இயலவில்லை. மேல்முறையீட்டாளரின் மேற்குறிப்பிட்ட 9

மனுக்களும் ஒருங்கே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தொலைபேசி வாயிலான விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5. இதுகுறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், பேரூர் மாவட்ட கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் மற்றும் ஸ்ரீ சௌடேஸ்வரி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளருக்கு 05.08.2019 மற்றும் 03.12.2019 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தகவல்களை வழங்கத் தயாராக உள்ளதாகவும், ஏற்கனவே மேல்முறையீட்டாளரைத் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளதாக மேற்குறிப்பிட்ட பள்ளியின் முதல்வர் ஆணையத்தில் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல்களை பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லை என தெரியவருகிறது. மேலும், மேல்முறையீட்டாளருக்கு தகவல்கள் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்ததன் அடிப்படையில், ஆணையத்தால் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள 05.07.2019, 09.07.2019, 09.05.2019, 11.05.2019, 14.05.2019, 02.05.2019, 10.05.2019 மற்றும் 29.05.2019 தேதிகளிட்ட மனுக்களில் குறிப்பிட்டுள்ள தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் மற்றும் பேரூர் மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் முதல்வர், ஸ்ரீ சௌடேஸ்வரி வித்யாலயா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, செல்வபுரம், கோயம்புத்தூர் ஆகியோர் இணைந்து தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 2(j)-ன்படி மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு ஆஜர்படுத்தி, ஆய்வு செய்தபின்னர் தனக்குத் தேவைப்படும் தகவலைக் குறிப்பிட்டுக் கோரும்பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி வழங்க பொதுத் தகவல் அலுவலர் மற்றும் பேரூர் மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் முதல்வர், ஸ்ரீ சௌடேஸ்வரி வித்யாலயா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, செல்வபுரம், கோயம்புத்தூர் ஆகியோருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- சு.முத்துராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண்கள். SA8899/D/2019, SA8900/D/2019, SA11360/D/2019, SA11361/D/2019, SA11362/D/2019, SA11363/D/2019, SA11413/D/2019, SA11756/D/2019, SA12431/D/2019.**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
பேரூர் மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்,
பேரூர் (இ) குனியமுத்தூர்,
கோயம்புத்தூர் - 641 008.

பொதுத் தகவல் அலுவலர்/ முதல்வர்,
ஸ்ரீ சௌடேஸ்வரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
அருள் கார்டன், ராமமூர்த்தி சாலை,
செல்வபுரம்,
கோயம்புத்தூர் - 600 026.

**மனுதாரர்**

திரு S. துரைசாமி,
91, மெக்ரிக்கர் ரோடு,
ஆர்.எஸ்.புரம்,
கோயம்புத்தூர் - 641 002.

Copy to: **SA8899/D/2019, SA8900/D/2019, SA11360/D/2019, SA11361/D/2019, SA11362/D/2019, SA11363/D/2019, SA11413/D/2019, SA11756/D/2019, SA12431/D/2019.**

AM PS - 051120